

Long-Term Care Home Update

*Community Newsletter*

Lakeridge Health

**June 2021** ஆனி 2021

## A Land mark Six Months ஒரு மைக்கலான ஆறு மாதங்கள்

ஏஜக்ஸ் பிக்கரிங் வைத்தியசாலைக்குப் பக்கத்திலேயே தற்போது கட்டுமானநிலையிலுள்ள புதியதொரு நீண்டகால பராமரிப்பு இல்லத்தினது 6மாத காலத்தின் அடையாளத்தைக்கொண்டாடுவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்த முக்கியமான மைல்கல்லினை அடையாளப்படுத்த நாம் கடந்த சில மாதங்களில் நடந்த அற்புதமான முன்னேற்றப்பணிகளை நினைவுகூருகின்றோம்.

- **July 2020: 2020** யூலை, ஒன்ராறியோஅரசு துரிதப்படுத்தப்பட்ட கட்டுமான பரீட்சார்த்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக லேக்றிச் ஆரோக்கியத்தின் ஏஜக்ஸ் பிக்கரிங் வைத்தியசாலை இடப்பகுதியில் ஒரு புதிய நீண்டகால பராமரிப்பு இல்லம் ஒன்றினைக் கட்டுவதற்கான அறிவிப்பினைச் செய்தது. இத்திட்டம் ஒரு புதிய இல்லத்தை வருடங்கள் அல்லாது மாதங்களுக்குள் கட்டி, மிகவும் தேவைப்பட்டதான 320 நீண்டகாலபராமரிப்புக் கட்டில்களை டுராம் பகுதிக்கு வழமையானகட்டுமானத்தைவிட விரைவாகக் கொண்டுவருவதற்கு உதவுகின்றது.



முதல்வர் ஃபோர்ட் புதிய கட்டுமானத்தை லேக்றிச் ஆரோக்கிய தர்மகத்தா சபைத்தலைவர் ஷரன் கொக்றன், அமைச்சர்கள் பீற்றர் பெத்லன் ஃபாலி. றொட்பிலிப்ஸ், மெரிலீ ஃபுல்லேர்ரன் ஆகியோருடன் சேர்ந்து அறிவிக்கின்றார்.

- **January 2021:** தை 2021 அமைவிடத்தில் குழுவினர் நிலத்தைத் தோண்ட கட்டுமானப்பணி முறைசார்ந்து ஆரம்பித்தது.
- **February 2021: 2021** மாசி: தைமாசி மாதங்கள்முழுவதும் கட்டுமானப்பணியாளர் குழு, கட்டட அத்திவாரத்திற்கான கொன்கிறீட் ஊற்றுதல் மற்றும் உதவிச்சேவைகளுக்கான அமைப்புகளை நிறுவுதல் போன்றவை உட்படத் தமது தோண்டுதலைத் தொடர்ந்தது.



*February 9 ,2021* மாசி 9, நடைபெற்றஅத்திவாரப் பணிகள்

- **March 2021:** பங்குனி 2021 இரு பெரிய கட்டுமானப்பணி இயந்திரங்கள் வந்துசேர்ந்தன. கட்டுமானப்பணிக்குழு நிலத்தள வேலை நிறைவுசெய்து,1வதுமாடிச் சுவர்களையும் எழுப்பின. லேக்றிச் ஆரோக்கிய நிலையம் ஒரு விசேட முகநூல் நேரடி நிகழ்வை நிகழ்த்த. அதில் பல டுறம் பகுதிவதிவாளர்கள் இணையவழியாக இல்லத்தினைப் பார்வையிடலில் பங்குபற்றினர்.
- **April 2021:** சித்திரை 2021: இல்லத்தின் 1ம்மாடிப்பணி நிறைவுற்றது.
- **May 2021:** மே 2021:(பிறஇடத்தில் கட்டப்பட்ட இல்லங்களின் பகுதிகளான) அமைப்புக்கூறுகள் ஏஜக்ஸ்க்கு வந்துசேர ஆரம்பிக்க 2ம் 3ம் மாடிப்பணிகள் நிறைவுபெறுகின்றன.
- **June 2021:** யூன் 2021: 4வது மாடி திட்டமிட்டபடி நிறைவுபெறுகின்றது. குழுவினர் 5ம் மாடி வேலையிலும் இறுதியான 6ம் மாடியிலும் வேலையை ஆரம்பிப்பர்.



*Crews working on the fourth floor on June19, 2021*
குழு 4வது மாடிப்பணிகளில் யூன் 19, *2021*

## A Look Ahead to Summer Construction

## கோடைகால கட்டுமானப்பணிபற்றிய ஒரு பார்வை

### Activities செயற்பாடுகள்

பல முக்கிய கட்டுமான அபிவிருத்திகள் கோடைகாலத்தில் உள்ளன. முன்னுள்ள வாரங்கள் மாதங்களில் பிசிஎல் கட்டுமான நிறுவனம் மின்தூக்கிப் பெட்டிகளைஅமைத்து, தரை மற்றும் கூரைவேலைகளையும் இல்லத்தின் எச்விஏசி மற்றும் மின் அலகுகளை அமைக்கவும் ஆரம்பிக்கும். இவ்வாறான பல வேலைகள் நடைபெற உள்ளதால் கட்டுமானப்பணி அமைவிடமும் அதனைச் சூழ்ந்த பகுதியும் தொடர்ந்து ஆரவாரத்துடனிருக்கும்.வதிவாளர்களின் தினசரி ஒழுங்குமுறை வேலைகளுக்குக் குந்தகமான குளப்பம், சத்தம் என்பவற்றை மிகவும் குறைப்பதற்காகக் குழுவினர் மிகுந்த முயற்சியைச் செய்கின்றனர்.

இந்த இல்லத்தின் கட்டுமானத்தின்போது தொடர்ந்து நாம் சமூகம் மற்றும் நமது அயலவர்களான உங்களிடமிருந்து நேரடியாக அறிவது முக்கியமாகும்.

இல்லத்தினது கட்டுமானப்பணி சம்பந்தமாக உங்களுக்கு ஏதாவது கேள்விகள் அல்லது மனக்குறைகள், கருத்துக்கள் இருப்பின் தயவுசெய்து **AjaxLTC@lh.ca** என்ற மின்னஞ்சலுக்கு அல்லது **905-576-8711ext.34167**என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்மோடு எந்தநேரத்திலும் தொடர்பு கொள்ளுங்கள்.

## Changes to Ajax Pickering Hospital and COVID-19 Assessment Centre Parking

## ஏஜக்ஸ் பிக்கரிங் வைத்தியசாலை மற்றும்கோவிட் 19 மதிப்பீட்டு மையம் கார்தரிப்பிட வசதிகளின் மாற்றங்கள்

இந்த நீண்டகாலப் பராமரிப்பு இல்லக் கட்டுமானம் ஒரு புதிய கார் தரிப்பிட வசதியை வைத்தியசாலை நிலத்தில் புதிய இல்ல மற்றும் ஏஜக்ஸ் பிக்கரிங் வைத்தியசாலை இரண்டினதும் அலுவலர்கள், நோயாளர்கள், வருகைதருனர்களது வாகனங்களுக்காகவென உள்ளடக்கியுள்ளது. தற்போதுள்ள நிலத்தள கார்தரிப்பிடங்களின் பகுதிகள் கட்டங்கட்டமாக மூடப்பட்டு புதிய கார்தரிப்பிட வசதிக்கான இடவசதி மேற்கொள்ளப்படும்.

யூன் மாதத்திலிருந்து பொது பொதுசன கட்டண மற்றும் வைத்தியசாலையின் தெற்குகொடியிலுள்ள கோவிட்-19 மதிப்பீட்டு நிலைய வாகனத்தரிப்பிடத்துக்குமான சென்றடையும் பாதைகள் மாறும். வாகனங்கள் தொடர்ந்தும் வைத்தியசாலை நிலப்பகுதிக்குள் நுழைவது வடக்கிலுள்ள ஹார்வுட் வீதி தெற்கு வழியாக நடைபெற்று பின்னர் புதிய ஏற்கனவே உள்ள கிழக்கு கீழ்பகுதி தரிப்பிடத்தின் வழியாகப் பாதைமாற்றம் செய்யப்படும். புதியவழிகளின் மூலம் சாரதிகள் பயணிக்க உதவியாக தெளிவான வழிகாட்டல்களும் அறிவிப்புப் பலகைகளும் அவ்விடத்தில் இருக்கும். எமது வருகையாளர்களுக்கு இதன்மூலமாக ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்காக மன்னிப்புக்கோருகின்றோம்.



*Artist's rendering of the new 500+ car parking garage for hospital and long-term care staff, residents and visitors*

வைத்தியசாலை மற்றும் நீண்டகால பராமரிப்பு இல்ல அலுவலர்கள், வதிவாளர்கள் மற்றும் வருகைதருனர்களுக்கான - புதிய 500 க்கும் அதிகமான வாகனத்தரிப்பிடவசதிக்கட்டத்தினது ஒரு ஓவியரது படைப்பு.

### Join our Resident Email List for Long-Term Care Updates

### நீண்டகால பராமரிப்பு இல்லம்பற்றிய இறுதித் தகவல்கள் பெற எமது வதிவாளர் மின்னஞ்சல் பட்டியலில் இணைந்து கொள்ளுங்கள்.

உங்கள் மின்னஞ்சல் முகவரியில் நேரடியாக இறுதிச் செய்திகள் நிகழ்ச்சிகள் பற்றிய அறிவிப்பு அழைப்புகளைப் பெறவேண்டுமா? **உங்களது பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மின்னஞ்சல்வழியாகAjaxLTC@lh.ca.**க்கு அனுப்பிவையுங்கள்.

எமது இணையத்திற்கு**lakeridgehealth.on.ca** சென்றும்அல்லது எம்மை ட்விற்றர் மற்றும் முகநூல் வழியாகப் பின்தொடர்வதன் மூலமும் இறுதித் தகவல்கள் பெற்றுவைத்துக்கொள்ளலாம்.